இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 17 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 09 – சனிக்கிழமை 26 ஆகஸ்ட் 2023 – வெளியூர் 16+8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 17 : Thiruvalluvar Year - 2054 - Aavani 09 - Saturday 26 August 2023 - Dak 16+8 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (25.8.2023) இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும் ‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை’ விரிவுபடுத்தி, 31,008 பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 17 இலட்சம் அரசுப் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் தொடங்கி வைக்கும் விதமாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த ஊரான திருக்குவளையில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்து, மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடி உணவருந்தினார்.

## இந்தியாவிலேயே முதன்முதலாக திட்டம் அறிமுகம்!

# ‘இன்று எனது வாழ்விலோர் பொன்னாள்!’

### 17 லட்சம் மாணவ – மாணவியர் பயன்பெறும் – விரிவுபடுத்தப்பட்ட ‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை’ திருக்குவளையில் துவக்கிவைத்து – முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**நாகை, ஆக.26-**

**தமிழ்நாடு முழுவதும் 17 லட்சம் மாணவ - மாணவியர் பயன்பெறும் - விரிவு படுத்தப்பட்ட ‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை’ திருக்குவளையில் துவக்கிவைத்து உரையாற்றிய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் “இந்தியாவிலேயே முதன்முதலாக இத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இன்று எனது வாழ்விலோர் பொன்னாள்” என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.8.2023) இந்தியாவிலேயே முதல் முறையாக, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும், ‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை’ விரிவு படுத்தி, 31,008 பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 17 இலட்சம் அரசுப் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் தொடங்கி வைக்கும் விதமாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த ஊரான திருக்குவளையில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் ‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை’ தொடங்கி வைத்து, ஆற்றிய உரை வருமாறு:-

‘வாழ்விலோர் பொன்னாள்’ என்று சொல்கின்ற வகையில், இந்த நாள் சிறப்பாக அமைந்திருக்கிறது.

**இந்தியத் தலைநகர் வரை வெளிச்சம் பாய்ச்சிய சூரியன்!**

அதைவிடச் சிறப்பு என்னவென்றால், இந்த இடம்! இந்த ஊர்! இந்த திருக்குவளை மண்ணில் உதித்த ஒரு சூரியன், தமிழ்நாடு முழுமைக்கும் ஒளி வீசியது. ஏன், இந்தியாவினுடைய தலைநகர் வரை அதனுடைய வெளிச்சம் பரவியது. அந்தச் சூரியனுடைய பேர்தான், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அப்படிப்பட்ட பெருமைக்குரிய நம் தமிழினத் தலைவர் கலைஞர் படித்த தொடக்கப் பள்ளியில்

தொடர்ச்சி 5 ஆம் பக்கம்

## இனம் – மொழி காக்கப்படுவதற்கு

# ஆன்மீக ஆளுமைகளும் பங்காற்ற வேண்டும்!

### தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி பவள விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**மயிலாடுதுறை, ஆக.26–**

**“இனம் – மொழி காக்கப்படுவதற்கு ஆன்மீக ஆளுமைகளும் பங்காற்ற வேண்டும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மயிலாடுதுறையில் தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரியின் பவள விழாவில் உரையாற்றும் போது வேண்டுகோள் விடுத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.8.2023) மயிலாடுதுறை மாவட்டம், தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரியின்

75ஆம் ஆண்டு பவள விழா நிறைவை முன்னிட்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு.

தருமபுரம் ஆதீனத்தின் முப்பெரும் விழாவில் பங்கேற்று, பல நல்ல நிகழ்ச்சிகளை மகிழ்ச்சியோடு அரங்கேற்றும் வாய்ப்பை இந்த மேடையில் நான் பெற்றிருக்கிறேன்.

16ஆம் நூற்றாண்டில் குருஞான சம்பந்தரால் தொடங்கப்பட்ட மிக மிகப் பழமையான மடம், இந்த தருமை மடம். திருவில்லிப்புத்தூரில் பிறந்து, மதுரையில் ஞானம் பெற்று, திருவாரூருக்கு வந்து சேர்ந்த குருஞான சம்பந்தர் உருவாக்கியது இந்த மடம். அன்று முதல் இன்று வரை ஆன்மீகப் பணிகளிலும், தமிழ்ப் பணி மருத்துவச் சேவை கல்விப் பணி – அறப்பணி ஆகிய சமூக பணிகளிலும் தருமை மடம் ஈடுபட்டு வருகிறது. இந்த தொண்டுள்ளம் தொடர்ந்து தொய்வின்றித் தொடர வேண்டும்.

1946ஆம் ஆண்டு தருமை ஆதீனத்தின் 25 ஆவது குருமகா சந்நிதானம் அவர்கள் தொடங்கிய இந்தக் கல்லூரியின் வெள்ளிவிழாவில்

1972ஆம் ஆண்டு, முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களும், பொன் விழா நிகழ்ச்சியில், கல்வி அமைச்சராக இருந்த இனமானப் பேராசிரியர் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்திருக்கிறார்கள்.

இப்போது பவள விழா கண்ட இந்த கலையரங்கத்தில் கலந்துகொண்டு உரையாற்றுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

**கல்லூரி பவள விழாவும் தி.மு.கழக பவள விழாவும்!**

இன்றைக்கு இங்கு பவள விழா. இந்த முப்பெரும் விழா கொண்டாடுகிற நேரத்தில் பவள விழாவையும் இணைத்து நீங்கள் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். இதில் ஒரு ஒற்றுமை என்னவென்று கேட்டால், வரக்கூடிய செப்டம்பர் மாதம் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பவள விழாவை நாங்கள் கொண்டாட இருக்கிறோம். அந்த பவள விழாவை கொண்டாடுவதற்கு முன்பே உங்கள் பவள விழாவில் கலந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கிறது.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.8.2023) மயிலாடுதுறை மாவட்டம், தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரியின் 75ஆம் ஆண்டு பவள விழா நிறைவை முன்னிட்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில், தருமபுரம் ஆதீனத்தின் 27வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் முன்னிலையில், தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரியின் பவளவிழா நினைவு ஸ்ரீலஸ்ரீ கயிலை நட்சத்திர குருமணிகள் கலையரங்கத்தில், தருமை இணையதள வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒலி ஒளிப்பதிவகத்தினை திறந்து வைத்தார். இவ்விழாவில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் எம். பன்னீர்செல்வம், நிவேதா எம்.முருகன், எஸ். ராஜ்குமார், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி. மகாபாரதி, தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரியின் முதல்வர் முனைவர் சி. சாமிநாதன், செயலாளர் முனைவர் இரா.செல்வநாயகம், இந்து சமய அறநிலையத்துறை உயர்நிலை குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.